# செய்தி வெளியீடு

**இலங்கையின் தேசிய கணக்கு மதிப்பீடுகள்**
**இரண்டாம் காலாண்டு - 2022**
**உற்பத்தி அணுகுமுறை**
**அடிப்படை ஆண்டு - 2015**

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

இலங்கையின், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (ஏப்ரல் 1 முதல் ஜூன் 30 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2015) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் ரூ. 5,374,716 மில்லியன்.

நிலையான விலையில் (2015), 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 2,782,114 மில்லியன்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், நடப்பு விலை GDPயின் சதவீத மாற்றம் 33.3 சதவீதமாகவும், ஆண்டுக்கு ஆண்டு GDP வளர்ச்சி வீதம் மறை 8.4 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் முறையே 8.4 சதவீதம், 10.0 சதவீதம் மற்றும் 2.2 சதவீதம் குறைந்துள்ளது.

உள்ளே

**நிர்வாக சுருக்கம்- 2**
**பின்னணி- 3**
**விவசாய துறையின் செயற்பாடு- 3**
**கைத்தொழில் துறையின் செயற்பாடு- 4**
**சேவைத் துறையின் செயற்பாடு- 4**

**Source Publication**

http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015


## நிர்வாக சுருக்கம்

தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 2021 ஆம் ஆண்டின் இதே காலாண்டின் பதிவு செய்யப்பட்ட GDP மதிப்பீட்டுக்கெதிராக 8.4 சதவீத மறைவளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது,

மேலும், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான (2015) விலையில் ரூ. 2,782,114 மில்லியனாகவும், 2021 இன் இரண்டாம் காலாண்டில் ரூ. 3,038,855 மில்லியனாகவும் பதிவாகியுள்ளது, இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் நிலையான விலையில் (2015) GDP ஆனது 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் அறிவிக்கப்பட்ட நிலையான விலையில் (2015) GDP ஐ விட அதிகமாக உள்ளது மற்றும் இது ரூ. 2,612,069 மில்லியனாகும்.

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், முந்தைய ஆண்டின் இரண்டாவது காலாண்டில் அறிவிக்கப்பட்ட நிலையான GDP மதிப்பின் அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு GDP வளர்ச்சி வீதம் கணக்கிடப்படுகிறது. அதன்படி, 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான இரண்டாவது காலாண்டு GDP தொடரில் நிலையான GDP நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை பின்வரும் படம் பிரதிபலிக்கிறது.

படம் 1
**நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தி – இரண்டாம் காலாண்டுத் தொடர் 2018-2022**




**மூலம்**
**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

மேலும், 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்கான இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் 2021 ஆம் ஆண்டின் அதே காலாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 4,032,171 மில்லியனில் இருந்து ரூ. 5,374,716 மில்லியனாகவும், இது 33.3 சதவீத நேர் மாற்றத்தையும் பதிவு செய்கின்றது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்; 'விவசாயம்', ‘கைத்தொழில்’ மற்றும் 'சேவைகள்' ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போதைய விலையில் முறையே 10.2 சதவீதம், 32.0 சதவீதம் மற்றும் 49.4 சதவீதம்

பங்களித்துள்ளன, அதே சமயம் 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 'பொருட்கள் மீதான வரிகள் மானியங்கள் நீங்கலாக' என்ற கூறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.4 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

இந்த காலாண்டில், மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும், விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் நடவடிக்கைகளால் முறையே 8.4 சதவீதம், 10.0 சதவீதம் மற்றும் 2.2 சதவீத மறை வளர்ச்சி வீதங்களையே பதிவு செய்தன.

## பின்னணி

கோவிட் - 19 தொற்றுநோய் நாட்டில் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் இறுதியில் இருந்து தொடங்கி, கடந்த ஏழு காலாண்டுகளில் அது அவ்வப்போது தோன்றி பொருளாதார நடவடிக்கைகளில் அழிவுகரமான நிலைமைகளை உருவாக்கியுள்ளது. மேலும், 2021 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிலும், இந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடும் காலாண்டிலும் இதே விளைவு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கோவிட் - 19 தொற்றுநோய் இந்த ஆண்டின் மதிப்பாய்வின் காலாண்டில் குறைந்தபட்ச தாக்கத்தை ஏற்படுத்தியது, இருப்பினும் பல பொருளாதார நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ள நிச்சயமற்ற இயக்க சூழல், உள்நாட்டு அமைதியின்மை மற்றும் அரசியல் ஸ்திரமின்மை நிலைமைகள் காரணமாக தங்கள் வணிகங்களை வழக்கம் போல் தொடர முடியவில்லை. குறிப்பாக மின்சாரத் தடை, எரிபொருள் தட்டுப்பாடு, சீமெந்து உள்ளிட்ட அத்தியாவசியமான பொருட்களை இறக்குமதி செய்வதில் விநியோகச் சங்கிலி சீர்குலைவு, உரம் மற்றும் இரசாயன விநியோகத்தில் தட்டுப்பாடு, பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்தில் இடையூறுகள் மற்றும் அதிக பணவீக்கம் காரணமாக அத்தியாவசியமற்ற சேவைகளில் ஏற்பட்ட குறைந்த தேவை ஆகியவை மதிப்பாய்வின் கீழ் உள்ள இக்காலகட்டத்தில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை நடவடிக்கைகளில் அழிவுகரமான நிலைமைகளை உருவாக்கியுள்ளன. பல பொருளாதார நடவடிக்கைகள் கடுமையாக அச்சுறுத்தப்பட்டுள்ளன; 'தானியங்களின் வளர்ச்சி' , நெல் வளர்ச்சி', 'காய்கறிகள் வளர்ச்சி', தேயிலை வளர்ச்சி', 'இறப்பர் வளர்ச்சி', கடல் மீன்பிடித் தொழில், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' செயல்பாடு, கட்டுமானத் தொழில், உற்பத்தித் தொழில் குறிப்பாக உணவு மற்றும் பானங்கள் உற்பத்தி, பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்ப சேவைகள், உண்மைச் சொத்து நடவடிக்கைகள், தொழில்சார் சேவைகள் மற்றும் மனித சுகாதார சேவைகள் ஆகியன. இந்தச் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக, இந்த நிச்சயமற்ற செயற்பாட்டுச் சூழல் காரணமாக பல பொருளாதார நடவடிக்கைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தலுக்கு உள்ளாகின. எனவே, இந்த காலாண்டில், விவசாயம் மற்றும் கைத்தொழில்துறை நடவடிக்கைகளின் மொத்த மொத்த உற்பத்தி குறைக்கப்பட்டது, அதே நேரத்தில் மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலாண்டில் சேவைகளுக்கான தேவையும் குறைந்துள்ளது.

## விவசாய துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், 2021 ஆம் ஆண்டின் காலாண்டில் பதிவான நேர் வளர்ச்சியின் 11.2 சதவீதத்துடன் ஒப்பிடும் போது, விவசாய நடவடிக்கைகள் 8.4 சதவிகிதம் சுருங்கியுள்ளன. விவசாயச் செயல்பாடுகளின் சுருக்கம் முக்கியமாக 'தானியங்களின் வளர்ச்சி' (32.3 சதவீதம்), 'தேயிலை வளர்ச்சி' (19.7 சதவீதம்), 'நெல் வளர்ச்சி' (15.6 சதவீதம்), 'கடல் மீன்பிடித்தல்' (15.3 சதவீதம்), 'இறப்பர் வளர்ச்சி' (13.7 சதவீதம்), 'விலங்கு உற்பத்தி' ( 13.6 சதவீதம்) மற்றும் 'காய்கறிகள் வளர்ச்சி' (13.2 சதவீதம்)

யால் உந்தப்பட்டது. இருப்பினும், இந்தக் காலாண்டில், 'நன்னீர் மீன்பிடித்தல்' (11.2 சதவீதம்), 'தாவரப் பெருக்கம் மற்றும் விவசாயத்துக்குத் துணைபுரியும் நடவடிக்கைகள்' (10.8 சதவீதம்), 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி: தேங்காய் உள்ளடங்கலாக' (10.5 சதவீதம்), 'காடுகள் மற்றும் மரம் வெட்டுதல்' (9.0 சதவீதம்), பல்லாண்டு பயிர்களின் வளர்ச்சி' (3.5 சதவீதம்), 'மசாலாப் பொருட்களின் வளர்ச்சி' (3.2 சதவீதம்) ஆகியவை நேர்வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், ஒட்டுமொத்த கைத்தொழில்துறை செயல்பாடுகள் முந்தைய ஆண்டின் இதே காலாண்டில் பதிவான 21.6 சதவீத உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 10.0 சதவீதம் சுருங்கியுள்ளது.

மதிப்பாய்வு செய்யப்பட்ட இக்காலாண்டில் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை 5.3 சதவீதம் சுருங்கியது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு காலாண்டுடன் ஒப்பிடும் போது, இந்த காலாண்டில் 'புடவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு', 28.2 சதவீதம் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தை பதிவு செய்துள்ளது. 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள்' தொழில்துறையில் 11.0 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது. மேலும், 'கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி' (78.0 சதவீதம்), 'மரம் மற்றும் மர பொருட்கள் தயாரிப்பு' (40.1 சதவீதம்), 'அடிப்படை உலோகம் மற்றும் உருவாக்கப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி' (28.6 சதவீதம்), 'வேறு உலோகம் அல்லாத கனிம பொருட்கள்' (28.4 சதவீதம்), 'இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி' (17.7 சதவீதம்) இந்த காலாண்டில் மறையான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன. எவ்வாறாயினும், இதற்கிடையில், 'காகித தயாரிப்புகளின் உற்பத்தி' மற்றும் 'தளபாடங்கள் உற்பத்தி' ஆகியவை முறையே 3.3 சதவீதம் மற்றும் 0.2 சதவீத நேர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

'கைத்தொழில்துறை நடவடிக்கைகளில்', 'கட்டுமான' செயல்பாடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 9.5 சதவீத பங்கிற்கு, 2022 இரண்டாம் காலாண்டில், 16.2 சதவீத சரிவை பதிவு செய்துள்ளது. மேலும், GDP இல் 2.0 சதவீதத்தை பகிர்ந்து கொண்ட 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' செயல்பாடு, மறை வளர்ச்சி வீதத்தில் 26.7 சதவீதத்தை பதிவு செய்தது.

இதற்கிடையில், 'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' செயல்பாடு 1.5 சதவீத நேர்வளர்ச்சி வீதத்தையும், 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' செயல்பாடு இந்த ஆண்டில் நேர்வளர்ச்சி வீதத்தில் 20.6 சதவீதத்தையும் பதிவு செய்துள்ளது.

## சேவைத் துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், 2021 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு காலாண்டுடன் ஒப்பிடும் போது, சேவைத் துறையின் செயல்திறன் 2.2 சதவீதம் குறைந்துள்ளது.

மீளாய்வுக்கு உட்பட்ட இக்காலாண்டில், 'நிதி சேவை நடவடிக்கைகள்' மற்றும் காப்புறுதி நடவடிக்கை' முறையே 19.5 சதவீதம் மற்றும் 16.8 சதவீதம் பற்றாக்குறையைப் பதிவு செய்துள்ளன. மேலும், 'தொழில்சார் சேவைகள்' (9.7 சதவீதம்), 'நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆடியோ வீடியோ தயாரிப்புகள்' (8.4 சதவீதம்), 'மனித சுகாதார சேவைகள்' (7.5 சதவீதம்), 'வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்' (6.0 சதவீதம்) 'பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள்' (0.7 சதவீதம்) மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

மேலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.9 சதவீதப் பங்கைக் கொண்டிருக்கும் 'IT நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய செயல்பாடுகள்', முந்தைய ஆண்டின் ஒப்பீட்டு காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இத் துறையில் 4.3 சதவீதம் சுருங்கியுள்ளது. மின்சாரத் தடை, எரிபொருள் பற்றாக்குறை, அந்நிய செலாவணி விதிமுறைகள், நிச்சயமற்ற இயக்க சூழல், அரசியல் ஸ்திரமின்மை, உள்நாட்டு அமைதியின்மை ஆகியவை இந்த குறைபாட்டிற்கு கணிசமாக காரணமாக உள்ளன.

இருப்பினும், சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளில் 2022 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் வழங்கும் நடவடிக்கைகள்' (35.3 சதவீதம்), 'அஞ்சல் மற்றும் கூரியர் சேவைகள்' (11.7 சதவீதம்), 'தொலைத்தொடர்பு சேவைகள்' (8.6 சதவீதம்), 'கல்வி சேவைகள்' (5.0 சதவீதம்), 'பிற தனிப்பட்ட சேவைகள்' (2.0 சதவீதம்) மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (1.7 சதவீதம்) ஆகியவை நேர்வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/GDP2015) வெளியிடப்பட்டுள்ளன.

பி. எம். பி அனுர குமார,
பணிப்பாளர் நாயகம்

**The Vision of DCS**

"To be the leader in the region in producing timely statistical information to achieve the country's development goals."

**The Mission of DCS**

"Making contribution in the socioeconomic development of the country by providing accurate timely statistics, more Effectively by means of new technology, and utilising the services of dedicated staff under a strategic leadership to become a prosperous nation in the globalised environment."

**Department of Census & Statistics,**
**Sankyana Mandiraya**
No. 306/71, **Polduwa Road,Battaramulla**

info@statistics.gov.lk
+94 11 2147000
+94 11 2147011
**statistics.gov.lk**

**This publication is produced by the National Accounts Division**
**3rd floor, Department of Census and Statistics**
National.accounts@statistics.gov.lk
**+94 112147071**  **+94 112877938**